<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்</u>

வழக்கு எண் OS. No.100/2019 நாள்: 06.03.2026

<u>வா.சா. 2 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வா.சா – 2 ஆனந்தராஜ் முன்னிலையானார். மொழிபெயர்பாளர் செல்வி. சுதாமணி அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.2 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிராதில் கையெழுத்து செய்துள்ளேன். இந்த வழக்கில் என்னுடைய சொத்தை எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவண எண்.867/2003, 1125/2003 ஆக தாக்கல் செய்துள்ளேன். நான் விலைக்கு வாங்கும் போது என்னுடைய பத்திரத்தில் கூட்டு பட்டா என்று உள்ளது. நான் தற்போது வரை வருவாய் துறையினரிடம் பத்திரத்தின் படி என்னுடைய சொத்தை பிரித்து கொடுக்க வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய இரண்டு பத்திரத்திலும் 9 சர்வே எண்கள் தனித்தனியாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய 2 பத்திரங்களிலும் 9 சர்வே எண்கள் சொல்லியிருந்தாலும் ஒவ்வொரு சர்வே எண்ணிற்கும் இத்தனை செண்டு என தனித்தனியாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ 22 ஆவணத்தில் 1 வது லக்க சொத்தில் நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 22 ஆவணத்தில் ஏக்கர் 8 செண்டு 79 ல் மேல் கடாசியில் செண்டு 98 என சொல்லப்பட்டுள்ளா என்றால் சொல்லப்பட்டுள்ளது. வா.சாஆ. 22 ஆவணத்தின் 1 வது லக்கசொத்தில் தெற்கு புறம் சர்வே எண் 61/3 ல் ஒரு புளியந்தோப்பு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.61/3 யாருடைய நிலம் என்றால் 9 பேருக்கு பாத்தியப்பட்டது. நான்குமாலில் கிழக்கு பக்கம் செல்வராஜ் என்று சொல்லப்பட்டுள்ள நபர் வாதிகளில் வருகிறாரா என்றால் அவரிடம் இருந்து தான் நான்

கிரையம் வாங்கியுள்ளேன். வா.சா.ஆ. 22 ஆவணத்தில் 2 வது லக்க சொத்தில் ஏக்கர் 2 செண்டு 42ல் வட கடாசியில் செண்டு 38 என சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. 2 வது லக்க சொத்தில் நான்கு மால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 22 ஆவணத்தில் 3 வது லக்க சொத்தில் 2 ஏக்கர் 32 செண்டில் மேல் கடாசியில் செண்டு 26 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 10 முதல் 15 வரையிலான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த 10 முதல் 15 ஆவணங்களிலும் தனித்தனியாக நான்கு மால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 10 முதல் 15 ஆவணங்களிலும் தனித்தனியாக சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 25 ஆவணம் 2017ல் கூட்டு உரிமையாளர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்த குத்தகை பத்திரம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 25 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான், அந்த வா.சா.ஆ.25 பத்திரத்தில் சுபாஷினி மற்றும் ரூபாஸ்ரீயும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சுபாஷினி கையொப்பம் செய்துள்ளார். ரூபாஸ்ரீக்கு பதிலாக அவரின் தகப்பனார் கையொப்பம் செய்துள்ளார். வா.சா.ஆ 25 ஆவணம் 20 ரூபாய் பத்திரம் என்றும் நான் 31.03.2017 ஆம் தேதி மேற்படி முத்திரை தாளை வாங்கியதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பத்திரம் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள தேதி 01.04.2017 என்றால் சரிதான். 9 பங்கு தாரர்களும் சேர்ந்து முடிவு செய்தது என்றால் சரிதான். வா.சா.ஆ. 25 ஆவணத்தின் கடைசி பக்கத்தில் 03.04.2021 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் இந்த ஆவணங்கள் 9 பேர் சேர்ந்து எழுதவில்லை என்றும் வழக்கிற்காக பழைய முத்திரை தாளை வைத்து உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 03.04.2021 என்ற தேதி குறிப்பிட்டு ஒரு நபரின் கையொப்பம் தான் உள்ளது என்றும் மற்றவர்களின் கையொப்பம் இல்லை என்றும் சொன்னால் சரிதான். நான் பணம் கொடுத்தேன் பொறுப்பில் இருந்தவரின் கையொப்பம் மட்டும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சாஆ. 26 ஆவணம் பட்டாவின் பேரில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.27 ஆவணம் மொத்தம் 9 புல வரைபடம் கொண்ட ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 9 புல வரைபடங்களும் தனித்தனி சர்வே எண்களை

கொண்ட வரைபடங்கள் என்றால் சரிதான். இந்த வரைபடங்கள் எங்களின்9 பேர் கொண்ட பத்திரத்தின் அடிப்படையிலும் சர்வே எண் அடிப்படையிலும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 28 ஆவணத்தை 2019 ஆம் வருடத்திலிருந்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் வா.சாஆ. 28 ஆவணம் கிடையாது என்றும் வழக்கிற்காக உற்பத்தி சொய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு சர்வே எண் படியும் பத்திரத்தில் உள்ள 4மால் படியும் பிரித்து கொள்ள ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். முன் உரிமையாளர் ஏற்கனவே வாய்கரலாக பிரித்து அனுபவத்தில் இருந்த வந்த சொத்தை தான் நானும் பிரதிவாதியும் கிரையம் பெற்று உள்ளோம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் 1ஆம் வாதிக்கு உடன் பிறந்த சகோதரர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/– C.Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.